மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போது பேசப்படுவது பரிசுச் சீட்டைப்பற்றி. அதைப் பொறுத்தவரையில் ஏற்றுக் கொள்வேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்பு

(அ) அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரவர்களிடமிருந்து சட்டப் பேரவையின் 55-வது விதியின் கீழ் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வரப்பெற்று இருக்கிறது. அதில்—

" This House expresses its want of Confidence in the Council of Ministers headed by the Hon. Thiru M. Karunanidhi'.' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தீர்மானத்தைப் போலவே திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. க. இராமமூர்த்தி, திரு. கே. விநயகம், திரு. டி. மார்டின் ஆகிய நான்கு பேரும் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து இருக்கிருர்கள்.

எதிர்க்கட்சித் தலைவருடைய தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[காங்கிரஸ் (அமைப்பு) கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்ருர்கள்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி அளிக்கப்பட வேண்டிய எண்ணிக்கை உறுப்பினர்கள் எழுந்து நின்றிருக்கும் காரணத்தால் இத்தீர்மானத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதென்று அறிவிக்கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்துள்ள தீர்மானத்திற்கு அனுமதி அளித்து இருக்கும் காரணத்தால் திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. க. இராமமூர்த்தி, திரு. கே. விநயகம், திரு. டி. மார்ட்டின் ஆகியவர்கள் கொடுத்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

இத்தீர்மானத்தின் மீது விவாதத்திற்கான தேதியை பின்னர் அறிவிக்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

குமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மார்ட்டின், திரு. பொன்னப்ப நாடார், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. ஆர். கருப்பையா ஆகியோர் குமரி மாவட்டத்தில் கடல் அரிப்பு பற்றி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிருர்கள்.